[2003 மார்ச் 26

ஆனால் இப்போது இந்த நெருக்கடியிலும், இந்தப் பணியைச் செய்ய எந்த நிதியையும் கொடுத்து, விலை கொடுத்து வாங்கி, நிலத்தைக் கையகப்படுத்தி மாற்று இடத்திற்குக் கொண்டு செல்வதற்கு தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 91, திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.*

91—

போக்குவரத்து வசதி

***9715—திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் முதல் வெள்ளாளகுண்டம் வழியாக முடியனூர் வரை சென்று வந்த 44-ஏ வழித்தடத்தை மீண்டும் இயக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சேலத்திலிருந்து வெள்ளாளகுண்டம் வழியாக முடியனூர் சென்று வந்த 44-ஏ தடப் பேருந்து, தடம் மாற்றி அமைக்கப்பட்டு முடியனூர் வழியாக தற்போது இரு பேருந்துகள், ஒன்று திம்மாலூருக்கும் ஒரு பேருந்து வேப்பிலைப்பட்டிக்கும் இயக்கப்பட்டு வருகின்றன. இப்பேருந்துகள் முடியனூர் கிராம மக்களின் போக்குவரத்துத் தேவைகளை முழுமையான அளவில் பூர்த்தி செய்து வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2003 மார்ச் 26]

முற்பகல் 10-45

திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 44-ஏ பேருந்து இப்போது இயக்கப்பட்டு வருவதாகக் கூறினார்கள். ஆனால் அந்தப் பேருந்து ரெகுலராக வருதில்லை. ஒருசில நாட்களில் வருகிறது. ஒருசில நாட்களில் வருவதில்லை. இதைக் கருத்தில்கொண்டு கருணை உள்ளம் கொண்ட மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய அரசு அந்தப் பகுதியிலுள்ள மாணவ, மாணவியர்கள், அரசு அலுவலர்கள் மற்றும் விவசாயப் பெருமக்களுடைய நலனைக் கருத்தில்கொண்டு இந்தப் பேருந்து ரெகுலராக வருவதற்கு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த வழித்தடங்களில் தொடர்ந்து பேருந்து இயக்குவதிலே தடைகள் இருப்பதாகச் சொன்னார். அப்படி இருப்பதாக அரசுக்கு குறிப்பிட்டுச் சொல்வீர்களேயானால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு உரிய நடவடிக்கை எடுத்து அந்த வழித்தடங்களில் தொடர்ந்து அந்தப் பேருந்துகளை இயக்குவதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தடைகள் ஏதும் இல்லை. ஆனால் அந்த பஸ்கள் ஒழுங்காக, ரெகுலராக வருவதில்லை என்று கூறினேன். அதனால் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு ரெகுலராக பஸ் வருவதற்கு நடவடிக்கை எடுக்குமா என்பதனை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நான் ஏற்கெனவே சொல்லி இருக்கிறேன். மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு இதிலே உரிய நடவடிக்கைகள் எடுத்து, தடைகளின்றி அந்த வழித்தடத்தில் தொடர்ந்து பேருந்துகளை இயக்குவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை மீண்டும் ஒருமுறை தெரிவித்துக்கொள்கிறேன்.

[2003 மார்ச் 26

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 92, திரு. தா. பச்சைமால், மாண்புமிகு மின் மற்றும் தொழில் துறை அமைச்சர்.

92—

அனல் மின் நிலையம்

***2264—திரு. தா. பச்சைமால்:**

மாண்புமிகு மின் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குளச்சல் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ராஜாக்கமங்கலத்தில் உள்ள 1200 ஏக்கர் அரசு புறம்போக்கு நிலத்தில் அனல் மின் நிலையம் அமைக்கும் திட்டம் எந்நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின் மற்றும் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்பொழுது குளச்சல் பகுதியில், பத்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் (2002-2007), அனல் மின் நிலையம் அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை.

திரு. தா. பச்சைமால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளச்சல் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட ராஜாக்கமங்கலத்தில் சுமார் 1200 ஏக்கர் அரசு புறம்போக்கு நிலம் உள்ளது. அங்கு 1984ஆம் ஆண்டு டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களது ஆட்சியில் அனல் மின் நிலையம் அமைக்க திட்டமிடப்பட்டது. அந்தப் பகுதியில் அனல் மின் நிலையம் அமைவதால் குமரி மாவட்டத்தில் படித்து, வேலையில்லாமல் இருக்கும் ஆயிரக்கணக்கானவர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். கடற்கரை மிக அருகில் உள்ளதாலும், கடற்கரைச் சாலை அந்தப் பகுதியில் செல்வதாலும் நிலக்கரி உள்ளிட்ட மூலப் பொருள் வந்து சேருவதற்கு மிகவும் ஏதுவாக இருக்கும். இதுவரை குமரி மாவட்ட மக்களுக்கு வேலைவாய்ப்புக்காக எந்தவிதமான தொழிற்சாலைகளும் இல்லை என்ற நிலை மாறும். எனவே மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய